அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 14/91(1)

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு. 7
1992, யூலை மாதம் 13ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்,
கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்டமுறைச் சபைகளின் தலைவர்கள்.

சலுகை நியதிகளில் வாகனங்களின் இறக்குமதி.

முறையே 1991.05.08ஆந் தேதியிலும் 1991.10.04ஆந் தேதியிலும் வெளியிடப்பட்ட 14/91ஆம் 14/91(1)ஆம் இலக்கச் சுற்றறிக்கைகளுக்குத் தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

02. இத்திட்டத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்த சிலர் விதிக்கப்பட்ட நிபந்தனைகளைத் தவறான வழிகள் மூலமாக மீறக் கூடிய சாத்தியமிருப்பதாகக் காணப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனத் தற்பொழுது அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

..(4

(1) சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் ஈட்டுமுறி ஒப்பமிடப்பட்டதன் பின் உடனடியாக 5 ஆண்டுக் காலப்பகுதிக்கு அரசாங்கத்தின் சார்பில் வாகனங்கள் ஈடு வைக்கப்பட்டுள்ளதென்னும் புறக்குறிப்பொன்றைச் செய்வதன் பொருட்டு வாகனங்களின் பதிவுப் புத்தகங்களை மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். வாகனத்தின் பதிவுப் புத்தகத்தில் உரிய புறக்குறிப்பொன்றைச் செய்த பின் பதிவுப் புத்தகத்தின் பிரதியொன்றை வாகனச் சொந்தக்காரருக்கு வழங்குதல் வேண்டும். அத்துடன் மூலப் பதிவுப் புத்தகம் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு திருப்பி அனுப்பப்படல் வேண்டும். ஈட்டுக் காலப்பகுதி முடிவடையும் வரை மூலப் பதிவுப் புத்தகங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படல் வேண்டும். இத்தேவைப்பாடு ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கும் ஏற்புடைத்தானதாகும்.

(11) சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் உத்தியோக பூர்வ வாகனங்கள் 5ஆண்டுக் காலத்திற்கு சலுகை நியதிகளில் வாகனங்களை இறக்குமதி செய்தவர்களுக்கு வழங்கப்படாமலிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(111) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் அவற்றை இறக்குமதி செய்தவர்களினால் உபயோகிக்கப்படுவதை அல்லது அவர்களின் கட்டுக்காப்பில் இருப்பதை உறுதிப்படுத்துவதில் பொலிசாரும் சுங்க அதிகாரிகளும் மோட்டார் வாகனப் பதிவாளரும் விழிப்புணர்வுடன் இருப்பர். இறக்குமதியாளரைத் தவிர்ந்த ஒருவரினால் வாகனமொன்று உபயோகிக்கப்படுவதாக அல்லது பிற ஒருவரின் கட்டுக் காப்பில் இருப்பதாக காணப்பட்டால் சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

(IV) வாகனமொன்றை இறக்குமதி செய்த ஒருவர் 5ஆண்டுக் காலம் முடிவடையு முன்னர் தமது பதவியிலிருந்து விலகினால் அல்லது பதவியை வெறிதாக்கினால் அல்லது தமது பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டால் அல்லது நிறுத்தப்பட்டால் இறக்குமதி செய்த நேரத்தில் தளர்த்தப்பட்ட தீர்வை, வரிகள் ஆதியன சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் அவரிடமிருந்து விகித முறை அடிப்படையில் அறவிடப்படல் வேண்டும். அறவிடப்பட வேண்டிய தீர்வை, வரிகள் ஆதியனவற்றின் தொகையை தீர்மானிப்பதற்கு சுங்கப் பணிப்பாளர் அதிபதியுடன் உசாவுதல் செய்யப்படல் வேண்டும்.

(v) சலுகை நியதிகளில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனமொன்றின் சொந்தக்காரர் வாகனம் வைத்திருக்கப்படும் முகவரி மாற்றத்தை மோட்டார் வாகனம் வைத்திருக்கப்படும் முகவரி மாற்றத்தை மோட்டார் வாகனப் பதிவாளருக்கும் திறைசேரிச் செயலாளருக்கும் சுங்கப் பணிப்பாளர் அதிபதிக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கும் அம்மாற்றம் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அறிவித்தல் வேண்டும்.

(vi) இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படவுள்ள வாகனங்களின் தொடர்பில் நாணயக் கடிதங்கள் இறக்குமதி உத்தரவுச் சீட்டு வைத்திருப்பவர்களின் பெயரில் மட்டுமே திறக்கப்படல் வேண்டும்.

(vii) தீர்வைத் தளர்த்திடுகளுக்கான சகல சிபாரிசுகளும் அமைச்சரவை மட்ட அமைச்சுகளின் செயலாளர்களினால் நேராக அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளர் வரிசைப் பதவிக்குக் குறையாத தரத்திலுள்ள உத்தியோகத்தர்களினால் ஒப்பமிடப்படல் வேண்டும். மாகாண சபைகளின் உத்தியோகத்தர்களின் விடயத்தில் தீர்வைத் தளர்த்திடுகளுக்கான சகல சிபாரிசுகளும் நேராக பிரதான செயலாளர்களினால் ஒப்பமிடப்படல் வேண்டும். தீர்வைத் தளர்த்திடுகளுக்கான சிபாரிசுகளில் ஒப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மாதிரி ஒப்பங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களினால் நேராக ஒப்பமிடப்பட்டு திறைசேரிச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. முறியினையும் திருத்திய உடன்படிக்கையினையும் மாதிரிப் படிவங்கள் தேவையான நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனம் ஒவ்வொன்றினையும் தொடர்பில் உடன்படிக்கையும் ஈட்டு முறியும் ஒப்பமிடப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். திறைசேரிச் செயலாளருக்கு இயைபுள்ள தளர்த்திடுகளைப் பற்றிச் சிபாரிசு செய்வதற்கு முன்னர் உடன்படிக்கையில் ஒப்பமிடப்பட வேண்டுமென்பதையும் சுங்கத் திணைக்களத்திலிருந்து வாகனம் அகற்றப்படும் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஈட்டு முறியில் ஒப்பமிடப்பட வேண்டுமென்பதையுந் தயவு செய்து கவனிக்கவும்.

ஒப்பம்: எம். என். ஜூனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

....6

14/91(v)

## மோட்டார் வாகனம் ஒன்றின் மீதான தீர்வைச் சலுகைகளை வழங்குவதற்கான உடன்படிக்கை

இந்த உடன்படிக்கையானது, ஒருதரப்பில், ..............ஐச் சேர்ந்த ......................... என்பவராலும் (இவர் இதனகத்து இனிமேல் "உத்தி-
(முழுப்பெயர்)
யோகத்தர்/ பணியாளர்" என அழைக்கவும் குறிப்பிடவும் படுவார்) மறுதரப்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கு (இது இதனகத்து இனிமேல் "அரசாங்கம்" என அழைக்கவும் குறிப்பிடவும்.) ஆகவும் அதன் சார்பிலும் .......... தொழிற்படும் .............. அமைச்சின் செயலாளராகவும்.. (முழுப்பெயர்) என்பவராலும் (இவர் இதனகத்து இனிமேல் "செயலாளர்" என அழைக்கவும் குறிப்பிடவும் படுவார். "செயலாளர்" என்ற பதம் அல்லது வாசகம் ஈண்டுபயன்படுத்தியதன்படி சந்தர்ப்பம் வேண்டுமாறு, வேண்டுமிடத்தும் அல்லதனுற்குமாறு ஏற்குபடத்து குறித்த .... ..................... அமைச்சின் செயலாளரான சொல்லப்பட்ட ..........
(முழுப்பெயர்)
எனப் பொருள்பட்டு அவரையும் அடக்கி சொல்லப்பட்ட பதவியில் தற்போதுள்ள அவரது பின்னமர்வாளர்கள் எனவும் .............. அமைச்சின் செயலாளரது பதவியில் பதிற் கடமை ஆற்றும் ஆள் அல்லது செயலாளர் தற்போது செய்யும் கடமைகளை புரியும் ஆள் எனவும் பொருள்பட்டு அவர்களையும் அடக்கி நிற்கும்) அவர்களுக்கு இடையில் செய்து கொள்ளப்படுகின்றது.

(அ) உத்தியோகத்தர்/ பணியாளர் தற்போது ....... இல்.........ஆகப் பணிபுரியும் நீதித்துறை உத்தியோகத்தர்/ அரசாங்க சேவையாளர்/ கூட்டுத்தாபனப் பணிப்பாளர் ஆனாராதலாலும்;

(ஆ) ஈண்டு அட்டவணையில் தரப்பட்டுள்ள விவரங்களைக் கொண்ட வாகனத்தை இறக்குமதி செய்வதன் பேரில் அரசாங்கத்துக்கு வாகனத்தினது ஆகுசெலவுக்காப்புறுதிக்கேள்வும் பெறுமதியின் 25% உத்தியோகத்தர்/ பணிப்பாளர் செலுத்துவார் என்பதற்கு அமைய செலுத்தத்தக்க மொத்ததீர்வைகள், வரிகளுக்குச் சமமான தொகையாக அமையும் ..............ரூபாத் தொகையை (ரூபா......) அரசாங்கம் உத்தி-யோகத்தருக்கு/ பணிப்பாளருக்கு சலுகையாக வழங்குவதற்கு உடன்பட்டுள்ளதாலும்;

(இ) மேற்சொன்ன சலுகையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை (இதுஇதனகத்து இனிமேல் சொல்லப்பட்ட வாகனம் எனக்குறிப்பிடப்படும்.) இரு தரப்பினரும் உடன்பட்டுக் கீழேதரப்பட்டிருக்கும் நியதிகள், நிபந்தனைகளுக்கு அமைய உபயோகிப்பதற்கு உத்தியோகத்தர்/ பணியாளர் உடன்பட்டுள்ளார் ஆதலாலும்;

14/91(v)

இப்போது இந்த உடன்படிக்கை அத்தாட்சிப்படுத்துவதாக:
உத்தியோகத்தரும்/ பணிப்பாளரும் செயலாளரும் பின்வருமாறு இத்தால் பரஸ்பரம் உடன்பட்டுக் கொள்கின்றனர்:

(1) சொல்லப்பட்ட வாகனம் தொடர்பில் செலுத்தத்தக்க சுங்கத்தீர்வை ரூபா ............ (ரூபா........).

(11) சொல்லப்பட்ட வாகனம் உத்தியோகத்தரால்/ பணியாளரால் இறக்குமதி செய்யப்படுகிறது.

(111) சொல்லப்பட்ட வாகனத்தின் இறக்குமதி தொடர்பில் செலுத்தத்தக்க மொத்த சுங்கத்தீர்வை, வரிகள் போன்றவற்றுக்குச் சமமான தொகையாகவுள்ள ........... ரூபாத் தொகையை/ (ரூபா ....) அரசாங்கம் உத்தியோகத்தருக்கு/ பணியாளருக்கு ஒரு சலுகையாக வழங்கும்.

(1V) உத்தியோகத்தர்/பணியாளர் சொல்லப்பட்ட வாகனத்தினது ஆகு செலவுக் காப்புறுதிக் கேள்வுப்பெறுமதியின் 25% பெறுமதியான ..........ரூபா கொண்ட ஒரு தொகையை (ரூபா......) அரசாங்கத்துக்கு ஒரு கட்டணமாகச் செலுத்துவார்.

(V) உத்தியோகத்தர்/பணியாளர் சொல்லப்பட்ட மோட்டார் வாகனத்தை மிக்க கவனமாக உபயோகிப்பதோடு அதனை முறைப்படி பழுது பார்த்து சீரானசேவை நிலையிலும் பேணுவார்.

(V1) உத்தியோகத்தர்/பணியாளர் சொல்லப்பட்ட மோட்டார் வாகனத்தினதும் அதன் ஒவ்வொரு பகுதியினதும் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருப்பதுடன் அதன் பூர்ணமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பார்.

(V11) உத்தியோகத்தர்/ பணியாளர் எந்தச்சூழ்நிலையிலாவது சொல்லப்பட்ட மோட்டார் வாகனத்தை எவரேனும் ஆளுக்கு, அவர் யாராயிருப்பினுஞ்சரி திறைசேரிச் செயலாளரின் முன் அங்கீகாரமின்றி கடனாகக் கொடுக்கவோ வாடகைக்கு விடவோ, குத்தகைக்குவிடவோ, விற்பனைக்கு விடவோ அடகு வைக்கவோ அல்லது பரிமாற்றம் செய்யவோ அல்லது பிறவிதத்திலோ தீர்வு செய்யவோமாட்டார்.

(V111) சொல்லப்பட்ட மோட்டார் வாகனம் ஏதாவது விபத்துக்கு உட்பட்டால் அல்லது அதில் சம்பந்தப்பட்டால் அல்லது சேதமுற்றால் அல்லது அழிக்கப் பட்டால் அல்லது இழக்கப்பட்டால் உத்தியோகத்தர்/ பணியாளர் அதனை

(1x) வாகனம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து ஐந்து வருடகாலப்பகுதியினுள் உத்தியோகத்தர்/ பணியாளர், நிதி அமைச்சின் செயலாளரது முற்பட்ட அங்கீகாரத்தைப் பெறாமல் வாகனத்தின் உடமையை எவரேனும் பிறருக்கு மாற்றலாகாது. அவ்வாறு மாற்றும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர் அவருக்கு வழங்கப்பட்ட தீர்வை, வரிகள் முதலிய சலுகையான ....... ரூபா கொண்ட தொகையை (ரூபா....) அரசாங்கத்துக்குச் செலுத்துவார். இந்த நிபந்தனை மீறப்படுமாகில் சுங்கக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரசாங்கம் வாகனத்தைப் பறிமுதல் செய்யும்.

(X) ஈண்டு அடங்கியுள்ள ஏற்பாடுகள் முறைப்படி நிறைவேற்றப்படுவதையும் இவ்வுடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக கூடியபணத்தொகை அனைத்தும் செலுத்தப்படுவதையும் எய்தப் பெறுவதற்காக உத்தியோகத்தர்/ பணியாளர் வாகனம் சுங்கத்திணைக்களத்திலிருந்து வெளியே எடுக்கப்படும் திகதியிலிருந்து (30 நாட்களுக்குள்) ஐந்து (5) வருடங்களைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு வாகனத்தை இறக்குமதி செய்த நேரத்தில் அது தொடர்பில் தளர்த்தப்பட்ட தீர்வையினதும் வரிகளதும் பெறுமதியான ......ரூபாத் (ரூபா...) தொகைக்கு வாகனத்தை ஐந்து (5) ஆண்டுகளுக்கு அரசாங்கத்திற்கு ஈடுவைத்தல் வேண்டும்.

(X1) உத்தியோகத்தர்/ பணியாளர் வாகனத்துக்கு வழங்கப்பட்ட தீர்வை, வரிச சலுகைகளுக்குக் குறையாத தொகைக்கு மேற்குறிப்பிட்ட ஐந்து வருடக்காலப் பகுதியில் வாகனத்திற்கு முழுமையான காப்புறுதிக்கவசத்தைப் பெறுதல் வேண்டும்.

(X11) இந்த சலுகையின் நியதிகளின் பேரில் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யும் உத்தியோகத்தருக்கு/ பணியாளருக்கு அதன் கொள்வனவுத்திகதியிலிருந்து ஐந்து (5) வருடகாலப்பகுதிக்கு உத்தியோக பூர்வ வாகனங்கள் வழங்கப்படலாகாது

(X111) உத்தியோகத்தர்/ பணியாளர் வாகனம் இறக்குமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருடகாலப்பகுதிக்கு உத்தியோக பூர்வவாகனத்தை உபயோகித்தலாகாது

(X1V) வாகனத்தை இறக்குமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 5 வருடகாலப்பகுதி முடிவடையுமுன் உத்தியோகத்தர்/ பணியாளர் தமது பதவியிலிருந்து விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து பதவி நீக்கஞ்செய்யப்படுமிடத்து இறக்குமதி செய்தநேரத்தில் தளர்த்தப்பட்ட தீர்வைவரிகள் ஆகியன விகிதமுறை அடிப்படையில் செயலாளரிடம் அவரினால் வழங்கப்படல் வேண்டும்.

(xiv) வாகனம் வைத்திருக்கப்படும் முகவரி மாற்றத்தைப் பற்றி உத்தியோகத்தர்/ பணியாளர் மோட்டார் வாகனப்பதிவாளருக்கும் திறைசேரிச் செயலாளருக்கும் சுங்கப்பணிப்பாளர் அதிபதிக்கும்செயலாளருக்கும் அம்மாற்றம் இடம் பெற்ற திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அறிவித்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட அட்டவணை
(மோட்டார் வாகன விவரணம்)

மோட்டார் வாகனம் ......................

(அ) ஆக்கமும் உருமாதிரியும் :- ......................
(ஆ) உடற்கோப்பு வகை :- ......................
(இ) எந்திர இல :- ......................
(ஈ) அடிச்சட்ட இல :- ......................
(உ) பதவி இல :- ......................
(ஊ) சேர்ந்த மிகைப்பொருட்கள் ......................
(எ) உபகரணங்களும் துணைச் சாதனங்களும் :- ......................

இதற்கு அத்தாட்சியாக உத்தியோகத்தரும்/ பணியாளரும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் தொழிற்படும் ஆயிரத்துத்தொள்ளாயிரத்து ........ ஆம் ஆண்டு ...... மாதம் ..... ஆம் தேதியாகிய இன்று கொழும்பில் இதனிலும் அதே பகர்ப்பும் திகதியும் கொண்ட இரண்டு பிற பிரதிகளிலும் தமது கையொப்பங்களை இட்டுள்ளனர்.

------------------------
(உத்தியோகத்தர்/ பணிப்பாளர்.)

------------------------
செயலாளர் ..... அமைச்சு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும்.

சாட்சிகள் :-

1. கையொப்பம் :- ............
பெயர் :- ............
பதவிப்பெயர் :- ............
முகவரி :- ............

2. கையொப்பம் :- ............
பெயர் :- ............
பதவிப்பெயர் :- ............
முகவரி :- ............

14/91(v) ஈட்டு முறி

இத்தால் சகலரும் அறிக!

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில்...............ஐச் சேர்ந்த திரு/திருமதி/செல்வி..................................என்பவர் (இவர் இதனகத்து இனிமேல் "கடன் பெற்றவர்" என அழைக்கவும் குறிப்பிடவும் படுவார். "கடன் பெற்றவர்" என்ற பதம் அல்லது வார்த்தை ஈண்டு பயன்படுத்தப் பட்டபடி சந்தர்ப்பம் வேண்டுமாறு அல்லது ஏற்கும் விதத்தில் சொல்லப்பட்ட ........................................எனப் பொருள்பட்டு அவரையும் அவரது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், மரணச் சொத்து நிருவாகிகள் எனவும் பொருள்பட்டு அவர்களையும் அடக்கி நிற்கும்.)

வாழ்த்துரைத்து வெளிப்படுத்துவதாவது

கடன் பெற்றவருக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் (இது இதனகத்து இனிமேல் "கடன் கொடுத்தவர்" எனக் குறிப்பிடப்படும். "கடன் கொடுத்தவர்" என்ற பதம் அல்லது வார்த்தை ஈண்டு பயன்படுத்தப்பட்டபடி சந்தர்ப்பம் வேண்டுமாறு அல்லது ஏற்கும் விதத்தில் சொல்லப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு எனப் பொருள்பட்டு அவர்களையும் அடக்கி நிற்கும்) இடையில் செய்து கொள்ளப்பட்ட........................தேதியிட்ட உடன்படிக்கையினை அனுசரித்து கடன் பெற்றவர், இதனுடனான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தின் (இது இதனகத்து இனிமேல் "சொல்லப்பட்ட வாகனம்" என அழைக்கப்படும்) இறக்குமதி தொடர்பில் கடன் கொடுத்தவருக்குச் செலுத்த வேண்டிய தீர்வைகள், வரிகள் யாவற்றினதும் கூட்டுத் தொகையான............................ரூபாக (ரூபா...............) கொடுப்பனவுத் தவிர்ப்பு ஒன்றைப் பெற்றுள்ளாராதலாலும் சொல்லப்பட்ட..................................என்ற வாகனத்தின் கொள்வனத் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் காலாவதியாவதற்கு முன்னர் கடன் பெற்றவர் சொல்லப்பட்ட வாகனத்தை விற்கும் சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட தொகையான....................................ரூபாவுக்குப் (ரூபா.....) பிணையாக கடன் கொடுத்தவருக்கு சொல்லப்பட்ட மோட்டார் வாகனத்தை ஈடு கொடுத்து அடைவாக வைப்பதற்கு உடன்பட்டுள்ளாராதலாலும்;

இப்போது, இதற்கு அத்தாட்சியாகக் கடன் பெற்றவர் மேலே கூறப்பட்டவற்றைக் கருத்திற் கொண்டு மேலே சொல்லப்பட்டவாறான அத்தகைய கொடுப்பனவுக்குரிய பிணையாக இத்துடனான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள, கைப்பற்றல்கள், விதிப்பணங்கள், சோந்தைகள், தடைகள் யாவுமற்ற சொல்லப்பட்ட வாகனத்தை ஒரு முதனிலை ஈடாக இத்தால் கடன் கொடுத்தவருக்கு விசேடமாக ஈடு கொடுப்பதுடன் அடைவும் வைத்துள்ளார்.

அத்துடன் கடன் பெற்றவர் கடன் கொடுத்தவருடன் இத்தால் பின்வருமாறு கூட்டு ஒப்பந்தஞ் செய்து உடன்பட்டுக் கொள்கிறார்.

1. இந்த முறி முடிவுறாதிருக்கையில் கடன் பெற்றவர் சொல்லப்பட்ட வாகனத்தைக் கடனாகக் கொடுக்கவோ, வாடகைக்குவிடவோ, பிணையம் வைக்கவோ, பரிசாக வழங்கவோ, பரிமாற்றஞ் செய்யவோ, வேறு வழியில் அகற்றவோ, அதன் உடைமையை விட்டுப் பிரியவோமாட்டார்.

2. சொல்லப்பட்ட கடன் பெறுநர் சொல்லப்பட்ட வாகனம் மீது சட்ட வழியிற் செலுத்தத்தக்க உத்தரவுப் பத்திரக் கட்டணம் அனைத்தையும் ஒழுங்காகவும் தவறாமலும் செலுத்துவார் எனவும் மேலே குறிப்பிட்ட................ ......ரூபாவுக்கும் (ரூபா...........) சொல்லப்பட்ட வாகனத்துக்கு வழங்கப் பெற்ற தீர்வை, வரிச் சலுகை என்பனவுக்கும் அவ்வாகனத்துக்குரிய தீ, கலவர ஆபத்துக்களுக்கெதிரான கவசத் தொகைக்கும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அகல் விரிவான காப்புறுதிக் கவசத்தைப் பெறுவாரெனவும் இத்தால் ஒப்பந்தஞ் செய்து வெளிப்படுத்துவதோடு சொல்லப்பட்ட வாகனத்துக்கு ஏற்படும் ஏதாவது சேதம் தொடர்பில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் செலுத்தும் பணத்தொகை அனைத்தையும் கடன் பெறுபவர் வாகனத்தைப் பழுது பார்ப்பதற்கே பயன்படுத்துவார்எனவும் சொல்லப்பட்ட மோட்டார் வாகனம் பழுது பார்க்க முடியாத அளவுக்கு அழிவுற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்படும் கொடுப்பனவை இந்த முறியை முழுமையாகத் தீர்வு செய்யும் வகையில் கடன் கொடுத்தவருக்கு கொடுப்பாரெனவும் இத்தால் மேலும் ஒப்பந்தஞ் செய்து வெளிப்படுத்துகிறார்.

3. மோட்டார் வாகனங்களின் பதிவாளர்........................என்ற சொல்லப்பட்ட வாகனத்தை, அதைக் கொள்வனவு செய்த திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலப் பகுதியினுள் சொல்லப்பட்ட................. ரூபாத்(ரூபா...................) தொகையைக் கொடுத்தற்கான சான்று இல்லாமல் இன்னொருவரது பெயருக்கு மாற்றமாட்டார்.

4. வாகனம் இறக்குமதி செய்த திகதியிலிருந்து ஐந்து வருட காலம் முடிவதன் முன்னர் கடன் பெற்றவர் தனது பதவியிலிருந்து விலகும் போது அல்லது தனது பதவியை வெறிதாக்கும் போது அல்லது பதவியிலிருந்து விலக்கப்படும் சந்தர்ப்பத்தில், வாகனத்தை இறக்குமதி செய்த நேரத்தில் அறவிடாதிருந்த தீர்வை வரி போன்றவற்றைக் கடன் கொடுத்தவருக்கு விகித முறை அடிப்படையில் செலுத்துதல் வேண்டும்.

5. மோட்டார் வாகனப் பதிவாளர் வழங்கிய பதிவுப் புத்தகத்தில் சொல்லப்பட்ட வாகனம் கடன் கொடுத்தவரின் பெயருக்கு ஈடு கொடுக்கப்பட்டுள்ளது என்ற புறக் குறிப்பு ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இதற்கு அத்தாட்சியாகக் கடன் பெற்றவர் இதிலும் இதே பகர்ப்பும் தேதியும் கொண்ட..............................களிலும் ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று.............ஆம் ஆண்டு........மாதம் ....ஆந் தேதியாகிய இன்று கொழும்பில் தனது கையொப்பத்தை இட்டுள்ளார்.

மேலே குறிப்பிட்ட அட்டவணை..........................என்ற மோட்டார் வாகனம் தொடர்புற்றது.

(அ) ஆக்கமும் உருமாதிரியும்:-
(ஆ) உடற்கோப்பு வகை:-
(இ) எந்திர இலக்கம்:-
(ஈ) அடிச்சட்ட இலக்கம்:-
(உ) பதிவு இலக்கம்:-
(ஊ) சேர்த்த மிகைப் பொருட்கள்:-
(எ) உபகரணங்களும் துணைச்சாதனங்களும்:-

இதற்கு அத்தாட்சியாக

..................
கடன் பெறுநரின் கையொப்பம்

<u>சாட்சிகள்</u>

1. கையொப்பம் ..................
   பெயர் ..................
   முகவரி ..................

2. கையொப்பம் ..................
   பெயர் ..................
   முகவரி ..................